**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**

**SC.No.24/2024 – PW-6**

| | |
|---|---|
| Name | திரு.பாபு |
| Husband/Father Name | சின்னப்பையன் |
| Village /Area | கரியாக்குடல் |
| Taluk | நெமிலி |
| Occupation | ஓட்டுநர் |
| Age | 49 |
| Religion | இந்து |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 16.07.2025.

**(எதிரிகள் ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். 26.02.2016 அன்று நான் வீட்டில் இருந்த போது எனது அண்ணன் தொலைபேசி மூலம் தனசேகர் என்பவரை கத்தியால் குத்தி விட்டார்கள் என தகவல் தெரிவித்தார். தனசேகர் என்பவர் வேகத்தடையில் விழுந்து விட்டதால் வேகத் தடையை அகற்ற வந்த போது மணி என்பவரின் குடும்பத்துடன் ஆனந்த் மற்றும் அருண் ஆகியோர்கள் தனசேகரை கத்தியால் குத்தி விட்டதாக தெரிவித்தார்கள். மேற்படி தனசேகரை சென்னை மருத்துவமனைக்கு எடுத்து சென்ற போது அவர் இறந்து விட்டதாக தகவல் தெரிவித்தாகவும் இதில் காயம் பட்ட கிருஷ்ணன், தேன்மொழி ஆகியோர்கள் சென்னை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தகவல்

தெரிவித்தார்கள் இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை : இல்லை.**

**ஒம்./–திருமதி. கே.எஸ்.ஜெயமங்களம்,**
**இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**அரக்கோணம்.**